**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்புவனம்**

| | | | |
|---|---|---|---|
| 2024-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 5-ம் நாள் திங்கள்கிழமை வாதி தரப்பு 1-ம் சாட்சியின் வாக்கு மூலம் 1869ம் ஆண்டு சட்ட எண் 44வது பிரிவு 6(1)ன் பிரிவின்படி உதவியாளர் திரு.சுவர்ணரத்தினக்குமார் என்பவரால் உறுதி பிரமானம் செய்யப்படுகிறது. | | | |
| பெயர்: | **ராமர்** | தொழில் : | |
| த.பெ: | | சமயம் : | |
| கிராமம்: | | சாதி : | |
| வட்டம்: | | வயது: | |

**5.2.2024 OS No.61/2021 வா.சா.1 ராமர் ஆஜர்**

**முதல் விசாரணை :**

1. நான் இந்த வழக்கின் 3-ம் வாதி ஆவேன். வாதி தரப்பு 1-ஆம் சாட்சியாக சாட்சியம் அளிக்கிறேன். என் தரப்பில் நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். பிரமாண வாக்கு மூலத்தில் உள்ள விவரங்களை படித்து காண்பித்து பின்பு நான் அதில் கையெழுத்து செய்துள்ளேன். பிராமண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். 14.10.1988-ம் தேதியிட்டு நத்தம் நிலவரித்திட்டத்தின் கீழ் என் தாத்தா சின்னப்பயல் என்பவருக்கு வந்த சர்வேயர் அறிவிப்பு அசல் தாக்கல் செய்கிறேன். **(சர்வேயர் அறிவிப்பு வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

**2.** 26.4.2015ம் தேதியிட்டு என் அப்பா பெயருக்கு டி.ஆலங்குளம் ஊராட்சி மன்றத்திலிருந்து இந்திரா நினைவு குடியிருப்பு திட்டத்தின் கீழ் வீடு கட்ட கொடுக்கப்பட்ட உத்தரவு **(உத்தரவு வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** என் அப்பா மொட்டையன் பெயருக்கு உள்ள வீட்டு வரி ரசீதுகள் 7 எண்ணம் தாக்கல் செய்கிறேன். **( வீட்டு வரி ரசீதுகளில் 1 ரசீது புகைப்பட நகலாக இருப்பதால் 7 ஆவணங்கள் மட்டும் குறியீடு செய்யப்படுகிறது. வீட்டு வரி ரசீதுகள் வா.சா.ஆ.3 வரிசை (7 எண்ணம்) ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

**3.** என் அப்பா மொட்டையன் பெயருக்கு உள்ள மின் கட்டண ரசீதுகள் 13 எண்ணம் தாக்கல் செய்கிறேன். **( மின்கட்டண ரசீதுகளில் 1 ரசீது இணையவழி நகலாக உள்ளது. மின் கட்டண ரசீதுகள் வா.சா.ஆ.4 வரிசை (13 எண்ணம்) ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** பிராதுப்படி தீர்ப்பு செய்ய வேண்டுமாய் பிரார்த்திக்கிறேன்.

**(வழக்கறிஞர் வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.)**

Taken down by me in open court readover/ interpreted to the witness in Tamil and acknowledged by him/ her to be correct

District Munsif Cum Judicial Magistrate, Thiruppuvanam.